ஸ்ரீ:
ஸ்ரீமதே ராமானுஜாய ஸ்ரீமத் வரத குரவே நம:
ஸ்ரீமத் வரவரமுநயே நம:

**திருக்குருகைப்பிரான் பிள்ளான் - வருஷ திருநக்ஷத்திரம் - ஆவணி - மிருகசீரிஷம்**

**தனியன்**

ஸிம்ஹே ம்ருகஸிரோத்பூதம் ராமாநுஜ பதாஸ்ரிதம் //
த்ராவிடாம் ஞாயதத்வஜ்ஞம் குருகாதிப மாஸ்ரயே /

(தனியனின் விளக்கம் - ஆவணியில் மிருகசீர்ஷநக்ஷத்திரத்தில் உதித்தவரும், ஸ்ரீராமானுஜருடைய திருவடிகளை ஆஸ்ரயித்தவரும், தமிழ் வேதத்தின் உண்மைப் பொருளை அறிந்தவருமான திருக்குருகைப்பிரான் பிள்ளானை ஆஸ்ரயிக்கிறேன்)

த்ராவிடாகமஸாரஜ்ஞம் ராமாநுஜபதாஸ்ரிதம் /
ஜுதியம் குருகேஸார்யம் நமாமிஸிரஸாऽந்வஹம் //

(தனியனின் விளக்கம் - திராவிடவேதத்தின் ஸாரத்தை அறிந்தவராய் எம்பெருமானாரின் திருவடிகளை ஆஸ்ரயித்த வராய் பேரறிவாளரான திருக்குருகைப்பிரான் பிள்ளானை தினந்தோறும் தலையால் வணங்குகிறேன்).

இவர் பெரிய திருமலை நம்பியின் மூன்றாவது திருக்குமாரர். பெரிய திருமலை நம்பி இவரை எம்பெருமானாருக்கு அபிமான புத்திரராக கொடுத்தார்.
இவருடைய சிஷ்யர் - எங்களாழ்வான்
இவர் எம்பெருமானாரின் வேண்டு கோளின்படி திருவாய்மொழிக்கு ஆறாயிரப்படி வ்யாக்யானம் செய்துள்ளார். இவர் தெளிவுமிக்க ஞானம் உடையவராக இருந்தார். எம்பெருமானார் இவருக்கு திருக்குருகைப்பிரான் பிள்ளான் என்ற திருநாமம் இட்டார்.

எம்பெருமானார் ஏற்படுத்திய 74 சிம்மாசனாதிபதிகளில் இவரும் ஒருவர் ஆவார்.

உபதேசரத்தினமாலை – 39,40,41 பாசுரம் - இவர் பெருமையை விளக்குகிறது

**பிள்ளான்** நஞ்சீயர் பெரியவாச்சான் பிள்ளை
தெள்ளார் வடக்குத் திருவீதிப்பிள்ளை
மணவாளயோகி திருவாய்மொழியைக் காத்த
குணவாளர் என்று நெஞ்சே! கூறு.

முந்துறவே **பிள்ளான்**. முதலானோர் செய்தருளும்.
அந்த வியாக்கியைகளன்றாகில். - அந்தோ
திருவாய்மொழிப் பொருளைத் தேர்ந்துரைக்கவல்ல
குருவார். இக்காலம் செஞ்சே! கூறு.

தெள்ளாரும் ஞானத் திருக்குருகைப்பிரான்
பிள்ளான். எதிராசர்பேரருளால் - உள்ளாரும்
அன்புடனே மாறன் மறைப்பொருளையன்றுரைத்தது
இன்பமிகு மாறாயிறம்.

எம்பெருமானாருடைய பரம கிருபையால் தெளிவுமிக்க ஞானத்தை உடையவரான திருக்குருகைப்பிரான் பிள்ளான் என்கிற ஆசாரியர் திருவாய்மொழிக்கு ரஸம்மிகுந்த ஆறாயிரப்படி என்கிற வியாக்கியானத்தை அருளிச்செய்துள்ளார்.

திருநாமங்கள் - குருகேஸர், குருகாதி நாதர், திருக்குருகைப்பிரான் பிள்ளான்
இவர் அருளிய க்ரந்தம் - திருவாய்மொழிக்கு ஆறாயிரப்படி வியாக்யானம்
இவர் எம்பெருமானாருக்கு அபிமான புத்திரர்.

## திருக்குருகைப்பிரான் பிள்ளான் என்று பெயர் வரக்காரணம்

பெரிய திருமலை நம்பிக்கு பிள்ளைதிருமலை நம்பி, ராமானுஜன், பிள்ளான் என மூன்று குமாரர்கள் இருந்தனர். எம்பெருமானார் திருமலை நம்பியிடம் கோவிந்தரை (எம்பாரை) யாசித்துப் பெற்றபோது, திருமலை நம்பி தம் குமாரரான பிள்ளானை அபிமான புத்திரராக வைத்துக்கொள்ளும்படி யதிராஜரிடம் அளித்தார்.

எம்பெருமானாரும் பிள்ளானிடம் பேரபிமானம் கொண்டவராய்த் தமக்கு அவரை ஜ்ஞாநபுத்திரராகக் கொண்டு அவரைத் திருவாய்மொழிக்கு ஆறாயிரப்படி வ்யாக்யானம் செய்யும்படி நியமித்தார். நம்மாழ்வாருக்கும் தமது ஆசார்யரான திருக்கோட்டியூர் நம்பிக்கும் திருநாமமான திருக்குருகைப்பிரான் என்னும் திருநாமத்தை பிள்ளானுக்கு சாற்றி திருக்குருகைப்பிரான் பிள்ளான் என்று அவரை அழைத்தார். இதன் மூலம் ஆளவந்தாரின் மூன்றாவது மனோரதத்தை நிறைவேற்றினார் எம்பெருமானார்.

முதன் முதலில் திருவாய்மொழிக்கு இவர் அருளிய ஆறாயிரப்படி வ்யாக்கியானமே மற்ற திருவாய்மொழி வ்யாக்கியானங்களுக்கு எல்லாம் வழிகாட்டியாய் அமைந்தது.

## பிள்ளான் அருளிய இரண்டாம் திருவந்தாதி தனியன்

என் பிறவி தீர விறைஞ்சினே னின்னமுதா.
அன்பே தகளி யளித்தானை. - நன்புகழ்சேர்
சீதத்தார் முத்துக்கள் சேரும். கடல்மல்லைப்
பூதத்தார் பொன்னங் கழல்.

கீழே கொடுக்கப்பட்டுள்ள விஷயங்கள் புத்தூர் ஸ்வாமி தொகுத்து வெளியிட்டுள்ள ஆசார்ய வைபவமஞ்ஜரியிலிருந்து எடுக்கப்பட்டது.

__ஆறாயிரப்படி அவதரித்தல் - சரமோபாய நிர்ணயம் என்ற நூலில் இருந்து எடுக்கப்பட்டது (இந்த நிகழ்ச்சி காஞ்சீபுரத்தில் நடந்தது)__

உடையவர் திருக்குருகைப்பிரான் பிள்ளானுக்குத் திருவாய்மொழி ப்ரஸாதிக்கிறபோது பொலிக பொலிக பொலிக (திருவாய்மொழி 5ஆம் பத்து 2ஆம் திருவாய்மொழி முதல் பாசுரம்) என்ற பாசுரம் வந்தவாறே பிள்ளான் மிக்க மகிழ்ச்சியோடே எழுந்தருளியிருக்க, உடையவரும் அதைக் கண்டு `இதென்ன வேறுபாடு தோற்றியிரா நின்றீர்' என்று கேட்டருள, `ஆழ்வார் தேவரீருடைய திருவவதாரத்தைக் கடாசஷத்தருளி கலியும் கெடும் கண்டு கொண்மின்' என்று சொன்னார்.

அப்படியே தேவரீரும் உருக்கள்தோறும் நாமே இதுக்கு விஷயமென்று தொட்டுக்காட்டியருளிற்று. அத்தையெல்லாம் இப்போது நினைத்து பார்த்து, `ஆழ்வார் அருளிச்செய்தபடியே ஸர்வோத்தாரகராய் நாடடங்க வாழும்படி திருவவதரித்த தேவரீரிடத்திலே ஸம்பந்தமும் பெற்று, தேவரீர் திருப்பவளத்தாலே திருவாய்மொழிக்குப் பொருள் கேட்கும்படிக்கு ஒரு ஸுக்ருதம் நேர்படுவதே! என்று விஸ்மயப்பட்டிருந்தேன்' என்றார். உடையவரும் இது கேட்டு மிகவும் உகந்தருளி, அன்று ராத்ரிகாலத்திலே பிள்ளானை அழைத்தருளி, அவர் திருக்கையைப் பிடித்துக்கொண்டு பேரருளாளர் ஸன்னிதியிலே அழைத்துக்கொண்டு எழுந்தருளித் தம்முடைய திருவடிகளிரண்டையும் அவர் முடியிலே வைத்தருளி, `இத்தையே தஞ்சமாகப்பற்றி விஸ்வஸித்திரும். உம்மை அடைந்தார்க்கும் இத்தையே காட்டிக் கொடும்' என்றருளிச்செய்து, `நாளை பேரருளாளர் ஸன்னதியிலே தொடங்கி திருவாய்மொழிக்கு, ஸ்ரீவிஷ்ணு புராண ஸங்க்யையிலே ஆறாயிரம் க்ரந்தமாக வ்யாக்யானம் பண்ணும்' என்று நியமித்தருளினார். இத்தால் தம்முடைய உத்தாரகத்வத்தை வெளியிட்டார்.

__பின்பழகிய பெருமாள் ஜீயர் அருளியுள்ள வார்த்தாமாலை - 136K வார்த்தையும் விவரணமும்__

எலுமிச்சம்பழம் கொடுத்து ராஜ்யம் பெறுவாரைப்போலே என்று பணிப்பர் திருக்குருகைப்பிரான் பிள்ளான். விவரணம் - உதாரனான சக்ரவர்த்தியைப்பார்க்கச் செல்லும் போது வெறுங்கையோடு செல்லலாகாது என்று அவன் மோந்து பார்ப்பதற்காக ஒர் எலுமிச்சம்பழத்தை எடுத்துச் சென்று கொடுத்து அவனுடைய வண்மையாலே ராஜ்யத்தைப் பரிசாகப் பெறுவதைப்போலே, த்வயத்தை உச்சரித்து, பரம புருஷார்த்தலசஷண மோசஷத்தைப் பெறுவது வ்யாஜமென்றும் சொல்லத்தகாததாய் இருப்பது' என்று திருக்குருகைப்பிரான் பிள்ளான் அருளிச் செய்வர். (சக்ரவர்த்தி - அரசன்)

**பின்பழகிய பெருமாள் ஜீயர் அருளியுள்ள வார்த்தாமாலை - 336 வார்த்தையும் விவரணமும்**

மூன்று வஸ்துவிலே பகவத்வஸ்து வளருமென்று பிள்ளான் பணிப்பர்.

விவரணம் - திருவநந்தாழ்வான் மடியிலும், பெரியதிருவடி திருமுதுகிலும், சேனைமுதலியார் திருப்பிரம்பின் கீழும்.

நாச்சிமாரோடே எம்பெருமான் லீலை கொண்டாட நிற்க, லீலையாலே ஜகந்நிர்வஹணத்தை மறக்கிறானோ என்று நியமிக்கைக்காக சேனைமுதலியார் எழுந்தருளினவாறே, `இந்தாணும் ஐயர் வந்தார்' என்று நாய்ச்சிமார் உள்ளே புக்கருளுவராம்.

எம்பெருமான் நித்தியஸுரிகளோடே பரிமாறும் போது தன்னை ஸ்வாமியாகவும் நித்தியஸுரிகளைத்தன் அடிமைகளாகவும் நினைத்துப் பரிமாறுவதில்லை. தன்னை ஓர் இளவரசனைப் போலவும் நித்தியஸுரிகளை - தன்னை மடியிலும், முதுகிலும் சுமந்து வளர்க்கும் தாய்மார்களைப் போலவும், தன்னை நியமித்து ராஜ்யகார்யங்களில் புத்திமதி சொல்லி நடத்திச்செல்லும் மூதறிஞர்களான மந்திரிகளைப்போலவும் நினைத்தே பரிமாறுவான் எம்பெருமான்.

இதையே பெரியாழ்வார் வானிளவரசு வைகுந்தக்குட்டன் (பெரியாழ்வார் திருமொழி 3ஆம் பத்து 6ஆம் திருமொமி 3ஆம் பாசுரம்) என்று அருளினார்.

இந்த நித்யஸுரிகளும் எம்பெருமானுடைய திருவுள்ளமறிந்து, இளவரசனை மடியிலும், முதுகிலும் சுமந்து வளர்க்கும் தாய்மார்களைப்போலவும் அவனை நியமிக்கும் மூதறிஞரான மந்திரிகளைப் போலவும் நடந்து கொள்வார்கள்.

ஓர் இளவரசனைப் போத்திக் கொண்டாடி நியமித்து வளர்க்கும் தாய்மார்களைப் போலே எம்பெருமானைத் திருவனந்தாழ்வான் தம் மடியிலே வைத்துச் சீராட்டி வளர்ப்பார்.

பெரிய திருவடியான கருடன் குழந்தைளை முதுகில் சுமந்து செல்வது போலே எம்பெருமானை முதுகில் சுமந்து சென்று கொண்டாடி வளர்ப்பார்.

ஸேனைமுதலியார் பிரம்பும் கையுமாக நின்று உபாத்தியாயர் பிள்ளைகளைப்போலே நியமித்து வளர்ப்பார் - என்று பிள்ளான் அருளிச் செய்வார்.

எம்பெருமான் நாச்சிமாரோடே விளையாடி லீலா ரஸங்களை அனுபவிக்கும் போது லீலாயாலே ஜகந்நிர்வாஹத்தை மறுந்துவிடப் போகிறானோ என்று எண்ணி, அவனை நினைவுறுத்து வதற்காக சேனைமுதவியார் அவ்விடத்திற்கு வந்தவுடன், `இதோ பாருங்காணும் பெரியவர் வந்திருக்கிறார்' என்று அருளிச் செய்து நாச்சிமார்கள் மாமனாரைக் கண்ட மணாட்டு பெண்களைப் போலே அடங்கி ஒடுங்கி உள்ளே புகுந்தருளுவார்கள்.

ரஹஸ்யத்ரயஸாரம் - சரமஸ்லோகாதிகாரம்

தன்னால் வரும் நன்மை விலைப்பால் போலே. அவனால் வரும் நன்மை முலைப்பால்போலே - என்று பிள்ளான் பணிப்பர்.

தன்னால் வரும் நன்மையாவது - ஸ்வயத்நத்தாலே (தன் முயற்சியால்) தான் தனக்குண்டாக்கிக் கொள்ளும் நன்மை.(விலைப்பால் போலே என்றது ஔபாதிகமுமாய், விரஸமுமாய், அப்ராப்தமுமாய் இருக்கும்). அவனால் வரும் நன்மை – நிருபாதிக ஸ்வாமியான அவனே இவனுக்கிது வேணும் என்றுண்டாக்கும் நன்மை. (முலைப்பால்போலே என்றது நிருபாதிகமுமாய், ஸரஸமுமாய், ப்ராப்தமுமாயிருக்கும்).

பிள்ளானும் எங்களாழ்வானும்

திருவெள்ளரையில் அவதரித்தவரான ஸ்ரீவிஷ்ணுசித்தர் எம்பெருமானாரை ஆஸ்ரயித்து, கூரத்தழ்வான் காலத்திற்கு பிறகு ஸ்ரீபாஷ்யாதிகளை எழுதுவதில் அவருக்கு உசாத்துனையாகயிருந்து `எங்காளழ்வான்' என்று எம்பெருமானாரால் அபிமானிக்கப்பெற்றார். எம்பெருமானார் இவரை எழுபத்து நாலு ஸிம்ஹாஸநாதிபதிகளில் ஒருவராக நியமித்தார். இவர் எம்பெருமானார் காலத்திற்குப்பின் பிள்ளானை ஆஸ்ரயித்திருந்து, அவரிடம் திவ்யப்ரபந்தங்களுக்கு அர்த்தம் கேட்டார்.

வடுகநம்பி அருளிய ஸ்ரீயதிராஜ வைபவம் - பிள்ளானை பற்றி சொன்ன விஷயம்

பிள்ளான் ஜ்ஞாநபுத்ரர் ஆதல்

ஒரு சமயம் தமது மடத்தினுள் இருந்து கொண்டு திவ்யப்ரபந்தத்தில் ஒரு பாசுரத்திற்குப் பொருளைப்பற்றி ஆராய்ந்து கொண்டு இருந்த யதிராஜரைக்கண்டு திருமலை நம்பியின் குமாரர் பிள்ளான் **நீர் ஆராய்ந்து முடிவுகட்டிய பொருள் இதுவன்றோ** என்று உரைத்தார். தாம் முடிவுகட்டிய பொருளும் பிள்ளான் கூறிய பொருளும் ஒன்றாக இருப்பதைக்கண்ட எதிராஜரும் மிகவும் ஆஸ்சர்யம் அடைந்து நாதமுனிகளின் ஜ்ஞான வம்சத்தில் உதித்த பெருமையால் இவர் இப்பொருளை அறிந்தார் என்று எண்ணி **எனது ஜ்ஞாந புத்ரரே** என்று பிள்ளானை அணைத்துக் கொண்டார்.

ஆறாயிரப்படி அருளல்

யுதிராஜரான ராமாநுஜாசார்யருக்கு ஜ்ஞாநபுத்திரர் என்றும் அவருடைய பாதுகையென்றும் புகழப்பெற்றவரான திருகுருகைப்பிரான் பிள்ளான் நம்மாழ்வாருடைய கடைசிப் பிரபந்தமான திருவாய்மொழிக்கு ஆறாயிரப்படி வ்யாக்யானம் அருளிச்செய்தார்.

**திருக்குருகைப்பிரான் பிள்ளான் திருவடிகளே சரணம்.**

வாசிக தோஷ: சஷந்தவ்ய: